15

# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம் -06 | குடியுரிமைக் கல்வி | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

பகுதி I

❖ பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

1) ஒருவரை ஒழுக்கமுடைய நற்பண்புமிக்க நற்பிரஜையாகும் வீடு தவிர்ந்த பரீட்சையமான சூழல்.
1. கோவில் 2. நூல் நிலையம் 3. வைத்தியசாலை 4. பாடசாலை

2) பாடசாலை ஒழுங்கமைப்பு மாதிரியில் பிரதான பதவி வகிப்பவர்.
1. ஆசிரியர் 2. மாணவர் 3. அதிபர் 4. மாணவ முதல்வர்

3) பாடசாலை மட்டக் கணிப்பீடுகளை நடாத்துபவர்.
1. ஆசிரியர் 2. அதிபர்
3. கல்விசாரா ஊழியர்கள் 4. பகுதித் தலைவர்

4) கல்வி சாரா ஊழியர்களது பணிகளில் ஒன்று,
1. தவணைப் பரீட்சைகளை நடாத்துதல்.
2. விழுமியங்களுக்கு ஏற்ப செயற்படுதல்.
3. பாடசாலையின் பாதுகாப்புக்கு உதவுதல்.
4. மாணவர்களின் அறிவு விருத்தினை ஏற்படுத்தல்.

5) உமது சரியான வயதை உறுதிப்பிடுத்தும் ஆவணம்.
1. தேர்தல் இடாப்பு 2. மாணவர் சேர்வு இடாப்பு
3. மாணவர் வரவு இடாப்பு 4. பிறப்புச் சான்றிதழ்

6) பாடசாலைக்கு வருகை தராமைக்கான காரணத்தைக் கூறும் மாணவரிடம் காணப்படக் கூடிய நற்பண்பு.
1. பொய்பேசுதல் 2. உண்மைபேசுதல்.
3. அவமானப்படுத்துதல் 4. கவலைப்படல்

7) கலாநிதி C.W.W கன்னங்கரா ஆரம்பக் கல்வியைப் பெற்ற பாடசாலை.
1. வேல்ஸ் ஒப் பிரின்ஸ் கல்லூரி 2. வெஸ்லி கல்லூரி
3. ரிச்மன்ட் கல்லூரி 4. ரன்தொம்பவெஸ்லியான் மிசனரிப் பாடசாலை

8) ஒருவரிடம் காணப்படக் கூடிய பலவீனங்களில் ஒன்று.
1. கோபப்படுதல் 2. மகிழ்ச்சியாய் இருத்தல்.
3. உண்மை பேசுதல் 4. கருணை

9) மாணவர் ஒருவர் எதிர்நோக்கும் சவால்களில் ஒன்று.
1. சிறந்த மாணவனின் நட்பு 2. பிறரால் மதிக்கப்படுதல்.
3. பொருளாதாரப் பிரச்சினை 4. தலைமைப்பொறுப்பு கிடைத்தல்.

10) இலங்கை அரச மருந்தக சாலையின் தாபகர்.
1. ராஜிதசேனாரத்ன 2. மைத்திரி பால சிறிசேன
3. புத்த தாச 4. சேனக பிபிலே

11) நற்பிரஜையாக வாழ்வதற்கு பேருதவியாக அமைவது,
1. அறிவு, திறமை, அன்பு
2. அறிவு, விளையாட்டு, திறமை
3. அறிவு, திறமை, மனப்பாங்கு
4. ஒழுக்கம், திறமை, மனப்பாங்கு

12) சிரமதானப் பணியில் ஈடுபடுவதால் விருத்தியடைக் கூடிய பண்பு.
1. அறிவு
2. திறமை
3. ஒழுக்கம்
4. நல்ல மனப்பாங்கு

13) மாணவன் ஒருவன் குறுகிய காலத்தில் அடைந்து கொள்ளக்கூடிய நல்ல நோக்கங்களில் ஒன்று.
1. தீய பழக்கத்திற்கு ஆளாகுதல்.
2. பாடசாலைக்கு ஒழுங்கற்று செய்தல்.
3. ஆங்கில புலமையை விருத்தி செய்தல்.
4. பொறியியலாளராகுதல்.

14) திட்டமிடப்படாத மாணவனின் பண்புகளில் ஒன்று.
1. முறையாக செயற்படுவர்
2. நோக்கத்தை அடைந்து கொள்வர்.
3. சவால்களை வெற்றி கொள்வர்
4. நேரம் வீணடிக்கப்படும்

15) உமது வீட்டு முகவரி சரியானதா என உறுதிப்படுத்தவது,
1. தாயிடம் இருந்து
2. தந்தையிடம் இருந்து
3. கிராம அதிகாரியிடம் இருந்து
4. தேர்தல் இடாப்பிலிருந்து

16) திணைக்களச் சட்டங்கள் சுற்று நிருபங்களை அமுல்படுத்துபவர்.
1. அதிபர்
2. ஆசிரியர்
3. பாட இணைப்பாளர்
4. மாணவர்கள்

17) பாடசாலை பற்றிய தகவல்களை அறிந்து கொள்வதற்கு பயன்படுபவை அனைத்தும்
1. வரலாறு
2. மூலாதாரங்கள்
3. நினைவிடம்
4. தூரநோக்கு

18) பாடசாலை ஒழுங்கமைப்பு மாதிரியில் அதிபருக்கு உதவும் அமைப்பு.
1. பழைய மாணவர் சங்கம்
2. சாரணர் அமைப்பு
3. விளையாட்டுக் கழகம்
4. மாணவர் முதல்வர் சபை.

19) இலங்கையின் முதலாவது கல்வி அமைச்சர்.
1. சேனகபிபிலே
2. அகிலவிராஜ் கரியவசம்
3. C.W.W கன்னங்கரா
4. பந்துல் குணவர்த்தன

20) பாடசாலை ஒன்றின் சம்பிரதாயம் பேணப்படும் சந்தர்ப்பம்
1. வகுப்பறைக் கற்றல்.
2. தவணைப் பரீட்சை
3. நவராத்திரி விழா
4. விளையாட்டுப் போட்டி

(2 x 20 = 40 புள்ளிகள்)

## பகுதி – II

❖ முதலாம் வினா உட்பட (5) ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

1) 1. முதலாம் தவணையில் குடியுரிமைப் பாடத்தில் நீர்மேற்கொண்ட கணிப்பீட்டினைத் தருக.
   2. கணிப்பீட்டினை மேற்கொண்ட பாட அலகினைத் தருக.
   3. கணிப்பீட்டினால் நீர் பெற்றுக் கொண்ட பயன்கள் 2 தருக.

(3 x 4 = 12 புள்ளிகள்)

2) 1. பாடசாலையின் வரலாறு என்பதால் கருதப்படுவது யாது?
   2. பாடசாலை வரலாற்றை அறிய உதவும் நபர்கள் நால்வரைக் குறிப்பிடுக.
   3. பாடசாலை வரலாற்றை அறிய உதவும் பாடசாலையில் பேணப்படும் ஆவணங்கள் நான்கைக் குறிப்பிடுக.

3) 1. மாணவர் சேர்வு இடாப்பில் இருந்து பெறக்கூடிய தகவல்கள் நான்கைக் குறிப்பிடுக.
   2. பாடசாலை ஒழுங்கமைப்பதில் அங்கத்துவம் வகிக்கும் நபர்கள் நால்வரைக் குறிப்பிடுக.
   3. பாடசாலையின் நிர்வாகி என்ற வகையில் அதிபரின் கடமைகள் நான்கைக் குறிப்பிடுக.

4) 1. சிறந்த மாணவனொருவரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் நான்கைக் குறிப்பிடுக.
   2. பாடசாலைக் கட்டமைப்பினுள் செயற்படும் அமைப்புக்கள் நான்கைக் குறிப்பிடுக.
   3. பின்வரும் தகவல்களைக் குறிப்பிடுக.
      உங்களது முழுப்பெயர்.
      உங்களது வயது.
      உங்களது முகவரி
      உங்களது சேர்விலக்கம்

5) 1. உம்மிடம் காணப்படும் திறமைகள் நான்கைக் குறிப்பிடுக.
   2. தனிமனித திறமைகளை அதிகரித்துக் கொள்வதற்கு பயன்படும் நுட்பங்கள் நான்கைக் குறிப்பிடுக.
   3. பலவீனங்களைக் குறைத்துக் கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் நான்கைக் குறிப்பிடுக.

6) 1. திட்டமிடல் என்றால் என்ன?
   2. திட்டமிட்டு பணியாற்றுவதனால் கிடைக்கும் நன்மைகள் நான்கைக் குறிப்பிடுக.
   3. திட்டமிட்டு செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்கள் நான்கைக் குறிப்பிடுக.

7) 1. மாணவர்கள் தொடர்பாக பாடசாலையில் காணப்படுகின்ற பொதுவான சட்டதிட்டங்கள் நான்கைக் குறிப்பிடுக.

2. சம்பிரதாயங்களை பாதுகாப்பதன் அவசியம் நான்கு தருக.

3. பாடசாலை ஒன்றின் தனித்துவத்தை அடையாளப்படுத்தும் விடயங்கள் நான்கு தருக.

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# தரம் 6,7,8

# தமிழ்

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Zoom செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் தமிழ் பாட வகுப்புகள்.

- ✅ மாறாத நேர அட்டவணையுடனான வகுப்புகள்.
- ✅ மாணவர்களின் அடைவு மட்டத்தை உயர்த்த தொடர்ச்சியான பரீட்சைகள்.
- ✅ பயிற்சி செயலட்டைகள் pdf வடிவில் வழங்கப்படும்.

**மாதக் கட்டணம்**

**850/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

Education கல்வி අධ්‍යාපන

**எங்கள் குறிக்கோள்**

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

**kalvi.lk**

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page